# மதுரை மாநகராட்சி

## வரவு - செலவு நிதி மதிப்பீடு மாமன்றக் கூட்டம்

2010ம் ஆண்டு **மார்ச்** திங்கள் **24ம்** நாள் **புதன்கிழமை** காலை **10.00** மணிக்கு

அறிஞர் அண்ணா மாளிகை
பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
மதுரை மாநகராட்சி 2010 - 2011-ம் ஆண்டு

**வரவு - செலவு நிதி மதிப்பீடு**
**மாமன்றக் கூட்ட நிகழ்ச்சி நிரல்**

---

அ) திருக்குறள் வாசித்தல்

**திருக்குறள் : "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் "**

**பொருள் :** நாள்தோறும் ஓதிவரும் மறை நூலினை ஒரு நாள் மறக்க நேர்ந்தாலும், மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் ஒரு தடவை தவறினாலும் முற்றிலும் கெட்டதாகவே மாறிவிடும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

---

**<u>1) பி4 / 32863 / 2007</u>**

**<u>2010-2011 நிதியாண்டு வரவு–செலவு நிதி மதிப்பீடு</u>**

1971ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 186(1)வது பிரிவின்படி, மதுரை மாநகராட்சி பொதுநிதி, குடிநீர் & வடிகால் நிதி, ஆரம்பக்கல்வி நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட நிதி மற்றும் நகர்புற ஏழை மக்கள் அடிப்படை வசதி திட்ட நிதி ஆகிய கணக்குகளின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும் 2010-2011–ம் ஆண்டிற்கான நிதி மதிப்பீடு ஆகியவற்றை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் வைக்கப்பட்டதில், மேற்படி குழுவின் 18.02.2010-ம் தேதிய 36 எண் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுடன், மேற்கண்ட 2009-10ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திருத்திய மதிப்பீடு மற்றும் 2010-11-ஆம் ஆண்டிற்கான பலன் வெளிப்பாட்டு (Outcome Budget) நிதி மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

***<u>மாமன்ற தீர்மானம்</u>*..எண். 879**

பொது நிதி, குடிநீர்&வடிகால், ஆரம்பக் கல்வி நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகரப்புற புனரமைப்பு திட்ட நிதி, நகர்ப்புற புனரமைப்பு திட்ட நிதி மற்றும் நகர்ப்புற ஏழை மக்கள் அடிப்படை வசதி திட்ட நிதி ஆகிய கணக்குகளின் **2009-2010** ஆண்டு திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டையும், **2010- 2011** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு நிதி மதிப்பீட்டையும், **2010 - 2011** ஆம் ஆண்டிற்கான பலன் வெளிப்பாடு மதிப்பீட்டையும் மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, மாமமன்றம் ஏகமனதாக ஒப்புக்கொள்கிறது.

**இடம் : மதுரை** **(ஒம்..) ஜி. தேன்மொழி**
**மேயர்**

**நாள் : 17.03.2010.** **மதுரை மாநகராட்சி**